[1973 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. காமாட்சி : துறையூர் வட்டத்தில் துறையூர் டவுன், முனிசிபாலிடி என்றுதான் இருக்கிறதேதவிர, துறையூர் கிராமம் என்று இல்லை. துறையூர் கிராமம் என்று ஒன்று இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துறையூர் கிராமம் இருப்பதாகத் தெரியவில்லை. நகராட்சி இருக்கிறது. அங்கிருந்துதான் இந்தச் செயற்குறிப்பு வரவில்லை என்று குறிப்பிட்டேன்.

வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை

* 450 **வினா—திரு. கே. எ. வகாப் .** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசியில் உள்ள பழைய கோட்டை, மசூதிகள் இவைகளைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள்பற்றிச் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. கே. எ. வகாப் : வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை, மசூதிகள் எல்லாம் தொல்பொருள் இலாகாவின் சார்பாக இருப்பதாகப் போர்டு போட்டிருந்தார்கள். அந்த போர்டைக்கூட இப்போது காணோம். அதிலுள்ள கற்களை எல்லாம் எடுத்து மக்கள் வீடு கட்டுகிறார்கள். அதோடு வட ஆர்க்காடு மாவட்டத்திலே நிறைய பழைய நவாப் பள்ளி வாசல்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க தொல்பொருள் இலாகாமூலம் முயற்சிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புராதனச் சின்னங்கள் என்ற வகையில் புராதனத்துவமும், முக்கியத்துவம் வாய்ந்தவை, வரலாற்று அடிப்படையில் இருப்பவற்றை மத்திய அரசும், மாநில அரசும் தேவைக்கேற்றவாறு பாதுகாப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வந்தவாசி கோட்டையில் அப்படி புராதனத்துவம், முக்கியத்துவம் அவ்வளவு உடையதாக இல்லை. இந்தப் பகுதி மிகுதியான நிலப்பரப்பு உடையது. அங்கு பலர் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அவை முழுவதையும் பாதுகாப்பது என்றால் ஏராளமான பொருட் செலவு ஆகும். சில கோடிட்ட பகுதிகளைமட்டும் எடுத்துப் பாதுகாக்கலாமா என்பதைப்பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பரிசீலித்து வருகிறார்கள். அப்படிக் குறிப்பிட்ட பகுதியைப் பாதுகாக்க இயலுமா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது.

1973 மார்ச் 21]

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ் நாட்டிலுள்ள பழைய கோட்டைகள், மசூதிகள் ஆகியவை முழுமையான அளவுக்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அந்த வகையில் மத்திய அரசு எந்தெந்த வகைகளில் உதவி புரிகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசினுடைய தொல்பொருள் துறையினர் சிலபல பழைமையான சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றின் முழுப் பொறுப்பையும் அவர்கள்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் முக்கியத்துவம் மிகுந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க தொல் பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. எ. வகாப் : வந்தவாசி அவ்வளவு முக்கியமானது அல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தியாவின் சரித்திரத்தையே மாற்றக் காரணமானது 'பாட்டில் ஆப் வண்டிவாஷ்' ஆகும். கோட்டையின் கற்களை எடுத்து வீடு கட்டப் பயன்படுத்துவதையாவது தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் குறிப்பிட்டேன். கோட்டை முழுவதையும் பாதுகாக்க வேண்டுமென்றால் அது இயலாத ஒன்று. கோட்டையினுடைய சுவர்கள், குறிப்பிட்ட பகுதிகளைப் பாதுகாக்க லாமா என்பதைப்பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும் நம்முடைய மூதாதையரால் கட்டப்பட்ட கலைக் கோயில்கள், பல்வேறு ஆலயங்கள் ஆகியவற்றை மத்திய அரசு தொல்பொருள் பாதுகாப்புத் துறை சரியாகப் பராமரிப்புச் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை மாநில அரசே ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா? மத்திய அரசுதான் அந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டிருக்குமென்றால் நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு அவர்களை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசினுடைய தொல் பொருள் ஆராய்ச்சித் துறை அகில இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதத்தக்க சிலபல தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாத்து வருகிறது. அந்த வகையில் தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம்

[1973 மார்ச் 21

கோவில், வேலூர் கோட்டைக்குள்ளே இருக்கும் கோயில்கள் ஆகியவற்றை எல்லாம் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கின்றது. பூம்புகார்பற்றிய ஆராய்ச்சியையும் மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த வகைகளில் மத்திய அரசு பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்ற நிலையில் அவர்கள் அதிகப் பணம் செலவழிக்க வேண்டும், அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். கங்கைகொண்ட சோழ புரம், தஞ்சைப் பெரிய கோயில் ஆகியவற்றைத் தமிழக அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று பல தடவை கேட்டும்கூட அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த காரணத்தால் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூறிவிட்டார்கள். அப்படியானால் அவற்றைப் பாது காப்பதில் பெரும் செலவு செய்து பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நாம் விட்டிருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை, வேலூர் போன்ற பகுதிகளில் பல மசூதிகள், கோட்டைகள் இன்றைக்குப் பல அசுத்த மான, தகாத காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டு வரு கின்றன. அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும், அல்லது மத்திய அரசு சரியானபடி அவற்றை நிர்வாகம் செய்யவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எழுத முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் குறிப்பிட்ட இடங்களைப் பொறுத்து எந்த அளவுக்கு அவை தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் வருகின்றன என்பதை வேண்டுமானால் மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியை விட்டுவிட்டு கொள்கைபற்றிக் கேட்க ஆரம்பித்துவிட்டீர்களே.

திரு. த. சோனையா : வந்தவாசி பழைய கோட்டையைப்போல் ஊமையன் கோட்டை, வெள்ளையன் கோட்டை, கட்டபொம்மன் கோட்டை போன்ற கோட்டைகள் எல்லாம் வீரம் விளைந்த மண்ணில் இருக்கின்றன. அந்தக் கோட்டைகளை எல்லாம் பாதுகாப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கோட்டைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போய்ப் பார்த்து வரவில்லை என்று

1973 மார்ச் 21]

தெரியவருகிறது. அவைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகிற கோட்டைகளாக மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர்கீழ்தான் இருந்து வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபோல் துணைக் கேள்விகள் கேட்கக் கூடாது.

திரு. கு. காமாட்சி : திருச்சி-சென்னை பாதையில் மங்களமேடு என்ற இடத்தில் ஒரு கோட்டை இருக்கிறது. மிக அழகாக இருக்கிறது. அது எந்தத் துறையால் பாதுகாக்கப்படுகிறது என்பது இதுவரையில் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள்கூட அந்த இடத்திற்கு வந்திருக்கிறார்கள். அது இனி யாவது பாதுகாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் விவரங்கள் அறிந்து கூறப்படும்.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள்

* 451. வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் (D.C.L.) எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் இம்மாநிலத்தில் மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் மட்டும்தான் இருக்கிறார்கள். அதிகமாகத் தொழில் தகராறு வரக்கூடிய இடங்களில் பொறுப்பை இவர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் திருச்சி, சேலம் போன்ற இடங்களிலும் புதிதாக டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் நியமிக்கப்படு வார்களா ? எந்த எந்த இடங்களில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய வட்டாரங்களில் துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுப் பணி யாற்றி வருகிறார்கள். தொழில் துறை அதிகாரிகள் மாநாட்டில் திருச்சி வட்டாரத்திலும் துணை ஆணையாளர் நியமிக்கப்படவேண்டுமென்று கோரப் பட்டது. அந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு அதைப் பரிசிலனை செய்வ தாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது திருச்சியில் ஒரு துணை ஆணையாளரை நியமிக்க அரசு ஆவன செய்து வருகிறது.